PERMANENT REFERENCE

# A DEVELOPMENT PLAN FOR THE UPLIFTMENT OF QUALITY OF LIFE OF THE PEOPLE IN THE VERUGAL(EACHCHILAMPATTAI) DIVISIONAL SECRETARIAT DIVISION

MR. SAMITHAMBY MURALITHARAN

LIBRARY
18 - 9 - 1997
EASTERN UNIVERSITY Sri Lanka

25915

DEPARTMENT OF MANAGEMENT
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY, SRI LANKA

1996

PROCESSED
Main Library EUSL

114
Library - EUSL

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| நன்றியுரை | | | |
| அத்தியாயம் | - 01 | அறிமுகம் | 1 |
| அத்தியாயம் | - 02 | நூலாய்வு | 7 |
| அத்தியாயம் | - 03 | வெருகல் (ஈச்சிலம்பத்தை) பிரதேச செயலாளர் பிரிவு பற்றிய அறிமுகம் | 33 |
| அத்தியாயம் | - 04 | புனர்வாழ்வு | 51 |
| அத்தியாயம் | - 05 | விவசாயம் | 62 |
| அத்தியாயம் | - 06 | மீன்பிடி | 80 |
| அத்தியாயம் | - 07 | கல்வி | 103 |
| அத்தியாயம் | - 08 | சுகாதாரமும் மருத்துவமும் | 126 |
| அத்தியாயம் | - 09 | வீட்டு வசதி | 141 |
| அத்தியாயம் | - 10 | கைத்தொழில் | 152 |
| அத்தியாயம் | - 11 | சுயதொழில் வாய்ப்பு | 159 |
| அத்தியாயம் | - 12 | கூட்டுறவு | 166 |
| அத்தியாயம் | - 13 | புனரமைப்பு | 180 |
| அத்தியாயம் | - 14 | செயற்திட்ட வடிவமைப்பு | 197 |
| பின்னிணைப்பு | : | அடிக்குறிப்புகள் | |
| | | உசாத்துணை நூல்கள் | |
| | | வரை படங்கள் | |

# திட்ட ஆய்வு அறிக்கைச் சுருக்கம்

வெருகல் (ஈச்சிலம்பத்தை) பிரதேச செயலகப் பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மேற்கொண்ட ஆய்வில் அங்குகாணப்பட்டவளங்களைக் கொண்டு விவசாயம்,மீன்பிடி கல்வி, வீட்டுவசதி, சுகாதாரமும்மருத்துவமும்,கைத்தொழில்,சுயதொழில்வாய்ப்பு,புனர்வாழ்வு,புனரமைப்பு,கூட்டுறவு ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டமாவது அபிவிருத்தித் திட்டமிடல் கூட்டுத் திட்டமிடல் தந்திரோபாய திட்டமிடல் என்பவற்றின் மூலம் பெறப்பட்ட நிறைவேற்றக்கூடிய சுருக்கமே இவ் ஆய்வுத்திட்டமாகும்.

இப் பிரதேசத்தில் காணப்படும் விவசாய நிலங்களையும் உச்சப் பயன்பாட்டிற்கு உட்படுத்தலை நோக்கமாகக் கொண்டு நீர்ப்பாசன வசதி,பாய்ச்சல் வடிகால் வசதிகளையும்,நல்லின குறுகியகால விதைகளையும் பயன்படுத்தி மரபுரீதியான முறைகளைக் கைவிட்டு நவீன முறைகளைப் பயன்படுத்தல் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் விவசாயிகளுக்கு உள்ளீட்டுப் பொருட்களை வழங்கி வெளியீட்டுப் பொருட்களை சந்தைப் படுத்தக் கூடிய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமான நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் நெல்,விவசாயம் மட்டுமன்றி, மேட்டுநிலப் பயிர்களையும்,கால்நடை வளர்ப்புத் திட்டத்தையும் அபிவிருத்தி செய்து விரிவுபடுத்தப் படுவதனால் விவசாயம் மூலமான வருமானத்தை அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம்.

கடல் வளத்தையும்,நன்னீர் வளத்தையும் மட்டுமன்றி களப்புகளாலான பிரதேசத்தையும் கொண்டமைந்த இப் பகுதியில் நண்டு,இறால்,மீன் என்பவைகளை பிடிப்பதில் நவீன முறைகளையும், உபகரணங்களையும் அறிமுகப்படுத்தி ஆழ்கடல் மீன் பிடிக்கான பயிற்சியையும் வழங்குவதோடு, படகு,வலை போன்ற உபகரணங்களையும் கடனாக வாங்குவதற்கு அல்லது மானியமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பிடிக்கப்படும் இறால்,நண்டு,மீன் என்பவைகளைப் பாதுகாத்து சேமித்து வைப்பதற்குரிய ஐஸ் தொழிற்சாலையை அமைத்துக் கொடுப்பதோடு உரிய சந்தை வாய்ப்பையும் பெற்றுக் கொடுப்பதனால் மீனவர்களின் வருமானத்தையும் சேமிப்பு,முதலீடுகளையும் பெருக்கி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம்.

கல்வி சம்பந்தமான கட்டிடவசதி,தளபாடவசதி மற்றும் தேவைகளையும் ஆசிரியர் பற்றாக் குறைகளையும் நிவர்த்தி செய்து கல்விக்கான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதுடன் மக்களின் கலை கலாச்சாரத்துடன் சம்பந்தமாக கல்வியை புகுத்துதல் வேண்டும். அத்துடன் தொழிற் கல்வியையும் புகட்டுவதன் மூலமும் கல்வித்தரம் உயரவும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் ஏதுவாக அமையும்.

வீடற்றவர் குறைகளை நீக்குவதாயின் யாவர்க்கும் வீடமைக்கும் திட்டத்தினை உருவாக்கி இப்பிரதேச செயலாளர் திருகோணமலை மாவட்ட வீடமைப்பு அ. அதிகார சபையுடன் இணைந்து இப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்கள்,அரசாங்க அதிபர் என்போர் மூலமாகவும் புனர்வாழ்வு,புனரமைப்பு, சமூகநலத்துறை அமைச்சின் திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் என்போரின் மூலமாகவும்,சேவை நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவிகளையும் மற்றும் பொருள் உதவிகளையும் அல்லது அமைப்பதற்கான உதவிகளையும் கடனாகவோ அல்லது நன்கொடையாகவோ வழங்குவதன் மூலம் உள்ளூர் மூலப் பொருட்களையும்,தொழிலாளர்களையும் பயன்படுத்தி குறைந்த செலவில் வீடுகளை அமைக்கலாம். அத்துடன் வீடமைப்புக் கடன்,மலசலகூட வசதிக்கான கடன் என்பவைகளை வங்கிகள்,வீடமைப்பு அ. அதிகார சபை என்பவற்றுக்கூடாக அறிமுகப்படுத்துவதன் மூலமும் வீடுகளை அமைக்க வழிசெய்யலாம்.

வைத்தியசாலை வசதிகள்,தேவைகள் உருவாக்கப்பட்டு விரிவுபடுத்தப் படுவதனாலும் சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்ட பழக்கவழக்கங்களை சகல பிரிவினர்களுக்கும் உணர்த்துவதனாலும் சுகாதாரம் மருத்துவம் என்பவற்றில் ஆளணியின் குறையை நிவர்த்தி செய்வதனாலும் மக்களின் சுகாதார மருத்துவ வசதிகளை உயர்த்தி ஆரோக்கியமான சந்ததியை உருவாக்கலாம். இதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

கைத்தொழில்களைப் பொறுத்தவரையில் சிறுகைத்தொழிலுக்கான கடன் வசதிகளையும் பயிற்சிகளையும் வழங்குவதோடு கைத்தொழிற் சாலைகளையும் நிறுவி உள்ளூர் மூலப் பொருட்களிலிருந்தும் தொழிலாளர்களிலிருந்தும் விளைத்திறனுடன் உச்சப்பயனையும் தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியத்தையும்,முடிவுப் பொருட்களுக்கான சந்தை வசதிகளையும் பெற்றுக் கொடுக்கலாம். இதனால் வருமானம் உயர மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரும்.

சுயதொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நவீன முறைகளில் உற்பத்தி,விற்பனைகளை மேற்கொள் வதற்கான தொழிநுட்பங்களையும் தந்திரோபாயங்களையும் அறிமுகப்படுத்துவதோடு முதலில்லாதவர்களுக்கு நன்கொடைகளை வழங்குதல் அல்லது கடன்களை அறிமுகப் படுத்துதல் மூலமாக இவர்களின் வருமானத்தை உயர்த்தலாம்.

புனர் வாழ்வுத் திட்டத்தின் மூலமாக பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும்,வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கும் உதவிகளைச் செய்வதன் மூலம் அவர்களிற்கு ஏதாவதொரு தொழிலை ஆரம்பித்து தன்னம்பிக்கையுடனும் சுதந்திரமாகவும் வாழ வழி செய்யப்படும். பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு உடனடியாக உதவிசெய்யும் திட்டத்தையும் நடைமுறைப் படுத்துதல் வேண்டும்.

புனரமைப்புப் பணிகளை இனங்கண்டு பிரதேச செயலாளரே முன்னின்று இவைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். புனரமைப்புப் பணிகளுக்கென ஒதுக்கப்படும் நிதியானது குறிப்பிட்ட திட்டங்களை பூரணமான முறையில் பூர்த்தி செய்யக் கூடியதாக உருவாக்குதல் வேண்டும். அவ்வாறு உருவாக்கப் படுபவை அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைகளுடன் தொடர்பு பட்டவையாக காணப்படும் பட்சத்தில் துறை ரீதியான வளர்ச்சியை ஏற்படுத்தி அபிவிருத்தியை மேற்கொள்ளலாம்.

மக்களுக்கு கூட்டுறவுச் சேவையை வழங்கும் பொருட்டு இப்பிரதேசத்திற்கென ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை ஸ்தாபித்து அதன் கிளைகளையும் நிறுவுதல் வேண்டும். ஏனைய கூட்டுறவுச் சங்கங்களையும் பதிவுசெய்து உருவாக்குதல் வேண்டும். இவைகள் மூலமான சேவைகளையும்,சலுகைகளையும் மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதோடு இப்பிரதேசத்தின் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்யவும்,மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்யவும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். மீனவர்களுக்கும், விவசாயிகளுக்கும்,சுயதொழில் மேற்கொள்வோருக்கும்,சிறுகைத் தொழிலாளர்களுக்கும் அவரது தொழில் சம்பந்தமாக உதவுவதோடு அவர்களது உற்பத்திப் பொருட்களைப் பாதுகாக்கவும் சந்தைப்படுத்தவும் வசதி செய்தல் வேண்டும்.

இவ்வாறான திட்டங்களின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே மூலகாரணமாகும்.